


கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், குடும்பநல துறை, பள்ளிக்கல்விதுறை மற்றும் இந்திய செஞ்சிலுவை சங்கம் இணைந்து நடத்தும், பள்ளி மாணவிகள் பங்கேற்ற உலக மக்கள் தொகை தின விழிப்புணர்வு பேரணியை நாகர்கோவில், புனித ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளியில் இன்று (11.07.2016) கொடியசைத்து, துவக்கி வைத்தார். மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார் உடனுள்ளார்.

செ.வெ.எண்: 433/2016 நாள்: 11.07.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு, பள்ளி மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை இன்று (11.07.2016) கொடியசைத்து, துவக்கி வைத்தார்.**

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், உலக மக்கள் தொகை தினத்தை முன்னிட்டு, குடும்பநல துறை, பள்ளிக்கல்விதுறை மற்றும் இந்திய செஞ்சிலுவை சங்கம் இணைந்து நடத்தும், பள்ளி மாணவிகள் பங்கேற்ற விழிப்புணர்வு பேரணியை நாகர்கோவில், புனித ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளியில் இன்று (11.07.2016) கொடியசைத்து, துவக்கி வைத்து, பேரணியில் கலந்து கொண்டார்.

பேரணியில் புனித ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளியை சார்ந்த 500 மாணவிகள் விழிப்புணர்வு பதாகைகளை கையில் ஏந்தியபடி, புனித ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளியிலிருந்து தொடங்கி, கணேசபுரம் சாலை, மாவட்ட முதன்மை கல்வி அலுவலகத்தின் வழியாக சென்று மீண்டும் புனித ஜோசப் கான்வென்ட் மேல்நிலைப்பள்ளியில் வந்து நிறைவடைந்தது.

நிகழ்ச்சியில் மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு. வெ.ஜெயக்குமார், மாவட்ட கல்வி அலுவலர் திரு. ஜாண் பெர்க்மான்ஸ், மாவட்ட குடும்ப நல செயலக மாவட்ட விரிவாக்க கல்வியாளர் திரு. ற்றி. விமலநாதன், செஞ்சிலுவை சங்க ஒருங்கிணைப்பாளர் மற்றும் துணை விரிவாக்க கல்வியாளர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.